Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-17 No. 03 July-September 2023

# தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் கல்வெட்டுகளும், நடுகற்கற்களும்

பா. மேகலா[1], முனைவர் கு. சிவப்பிரகாசம்[2]
1 முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), 2 உதவிப்பேராசிரியர்
1,2 தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, தருமபுரி - 636705
megalapgm@gmail.com

அறிமுகம்

உலக மொழிகளில் உயர்தனிச் செம்மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ், சமஸ்கிருதம், சீனம், கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு ஆகிய ஆறு மொழிகளில் தனிச்சிறப்புடன் உலகம் முழுவதும் பேசப்படும் மொழியாக தனித்துவம் பெற்று முதல் வரிசையில் இடம் பெற்றிருப்பது தமிழ்ச் செம்மொழியாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களோடு உலகிற்கே வழிகாட்டும் இலக்கியக்கொள்கை, கோட்பாடுகளையும், பொதுவியல் சிந்தனைகளையும் உள்ளடக்கி இயங்கிவருவது தமிழ்ச் செம்மொழியின் தனிச்சிறப்பாகும்.

காலமாற்றம், கணினிப் பயன்பாடு, அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற அனைத்தையும் தன்னகத்தே கொண்டியங்கும் ஆற்றல் படைத்த தமிழ்ச் செம்மொழியை இன்று உலகசமுதாயம் உற்றுநோக்கத் தொடங்கி இருக்கிறது. இதற்கு தமிழகத்தில் நடக்கும் அகழாய்வு முடிவுகள் மேலும் வலிமை சேர்த்திருக்கின்றன. இதன் விளைவாக ஆசிய, ஐரோப்பிய, மேலை நாடுகளில் தமிழ்ச் செம்மொழியை ஆய்வு செய்ய தனி இருக்கைகள் அமைத்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சூழலில் தமிழ்ச் செம்மொழி குறித்த ஆய்வுகள், செம்மொழிப் பண்புகள், தகடூருக்கும் தமிழ்ச் செம்மொழிக்கும் உள்ள தொடர்புகள் ஆகியவற்றை அடுத்த நகர்வுக்கு இட்டுச் செல்வது அவசியமாகிறது. இந்த அடிப்படையில் தமிழ்ச் செம்மொழிக்கும், தகடூருக்கும் உள்ள தொடர்பை கல்வெட்டுகள், நடுகற்கள் ஆகியவற்றை இலக்கியங்கள் வாயிலாக ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகிறது

வரலாற்றுப் பின்னணி

இந்தியாவிலேயே 70 விழுக்காடு நடுகற்களைக் கொண்டது தர்மபுரி என்று அழைக்கப்படும் தகடூர் பகுதிதான் என்று தொல்லியல் ஆய்வாளர் முனைவர் தீ.சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார் (வரலாற்றில் தகடூர் நாடு ப.10). தகடூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிசெய்த நெடுமிடல், அதியமான், பொகுட்டெழினி ஆகிய சங்ககாலத்து மன்னர்களைப் பற்றியச் செய்திகள் தகடூர் யாத்திரை உட்பட சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அதிக நாட்கள் உயிர் வாழவைக்கும் என்று நம்பப்படும் கருநெல்லிக்கனியை அதியமான் அவ்வைக்குக் கொடுத்தான் என்ற வரலாற்று செய்திகள் சங்க இலக்கியங்களில் வழியாக அறியமுடிகிறது. (புறநானூறு, சிறுபாணாற்றுப்படை).

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆண்களுக்கு நிகராக அறிவுப் புலமையோடு பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்னும் சமத்துவச் சமூகம் இருந்தமைக்கு (அதியமான்-அவ்வை-தகடூர்) தமிழ்ச்செம்மொழி இலக்கியங்கள் சான்றளிக்கின்றன. அத்துடன் மன்னர்களுக்கு அறிவுரையும், ஆலோசனையும்

வழங்கி ஆட்சி நடத்தும் அரசுகளுக்கு அருகில் பெண்கள் செயல் புரிந்திருக்கிறார்கள் என்பதுவும் இங்கே சிறப்பு பெறுகின்றது.
அதியனும் அவ்வையும் பாலின சமத்துவத்தோடு வாழ்ந்த பகுதியில் அடையாளமாக சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் குதிரைமலை இன்றளவும் தகடூர் என்று அழைக்கப்படும் தருமபுரியில் நிலைத்து நிற்கின்றது. செம்மொழி இலக்கியங்களும்,வரலாறும், தொல்லியலும் பிணைந்திருக்கும் அகழாய்வுக்குத் தகுதியான தகடூரும், தமிழ்ச் செம்மொழியும் பிரிக்க முடியாதவையாகும்.

தகடூர் பெயர்க்காரணம்
'தகடூர்' என்ற பெயர் பற்றிய கருதுக்கோள்கள் ஏராளமாக உள்ளன. 'தகரமரம்' என்ற மரம் இப்பகுதியில் அதிகமாக இருந்ததால் 'தகடூர்' என்று கருதப்படுகின்றது. மேலும், தகடு+ஊர் என்று தகடூரைப் பிரிக்கலாம். சொல்வழக்கில் மருவி வரும்போது 'தகடூர்' என்று வந்திருக்கலாம். தகடு என்ற சொல்லுக்கு 'பொன்' 'தாமரைப் பூவின் புறவிதழ்' போன்ற பல்வேறு பொருள்கள் உள்ளன. தகடு என்றால் தட்டையாக உள்ளபகுதி என்பதாலும், இந்நகரத்தின் அமைப்பும் இப்படி இருந்ததாலும் இந்நகரை 'தகடூர்' என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. இங்கு 'தகடு' என்னும் கனிமப்பொருள் அதிகமாக கிடைத்ததால் இது 'தகடூர்' என்று அழைக்கப்பட்டது (மார்க்சிய, வரலாற்று ஆய்வாளர் தேவபேரின்பன்) என்றும் கூறுவர்.
தகடூர் பகுதியின் சிறப்புகள்

இந்தியாவில் ஒரே பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பாறை ஓவியங்கள், சிந்துவெளி எழுத்துச் சான்றுகள் கிடைத்திருப்பது தகடூர் பகுதியில் இருந்துதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதியன் காலத்தில் 'தகடூர்நாடு' எனப்பெயர் பெற்றிருந்தது. பண்டையக் காலம் முதற்கொண்டு தமிழ்மக்கள் இப்பகுதியில் தொடர்ந்து வாழ்ந்துவந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இதுவரை 89 வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அரூர் இருளப்பட்டியில் (பாப்பம்பாடி) கிடைத்த வட்டெழுத்துக் கல்வெட்டு தமிழகத்தின் தொன்மையான கல்வெட்டாகும்.

செவ்வியல் இலக்கியங்களில் தகடூர்

'தகடூர்' என்ற பெயர் சுமார் 2300 ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'தகடூர்' என்பது புதிய ஊர் அல்ல என்பதையும், அவற்றின் தொன்மையை விளக்கும் வகையில் 'மூதூர்' என்ற சொல்லும் பெரிய ஊர் என்பதற்குச் சான்றாக 'வியன்நகர்' என்றும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் பெருஞ்சேரல் இரும்பொறை அதியமான் நெடுமான் அஞ்சியோடு போர்செய்து வெற்றிப் பெற்ற சிறப்பைக் கூறுகிறது. இப்பாடல் வழியாக 'தகடூர்' என்ற பெயர் அதியமான் வாழ்ந்த பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.
"வலம்புரி முரசின் இலங்குவன வீழுஉம்
அவ்வெள்ளருவி யுவ்வரையதுவே
சில்லறைவிரலி! செல்குவைஆயின்
வள்இகழ்த் தாமரை நெய்தலொடு அரிந்து

கிளிகடி மேவலர் புறவுதொறும் நுவலப்
பல்பயன்நிலைஇய கட்டுரை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பிற் தகடூர். (பதிற்றுப்பத்து - 78)

வளையனிந்த விறலி பெருஞ்சேரல் இரும்பொறையினிடத்துச் சென்றால் அங்கு நீ காண்பது மென்மையான இயல்புடைய மகளிர் மருதநிலத்தில் உள்ள தாமரைப் பூவையும், நெய்தல் பூவோடு சேர்த்து அரிவர். காட்டில் கிளியை விரட்ட பாடல்களைப் பாடுவர். இத்தகைய முல்லை நில வளங்களைக் கொண்டது சேரமன்னனின் ஊராகும். இவ்வூரில் உள்ள சேரமன்னன் செய்யும் போரில் வெற்றிபெறும் வீரர்மறத்தை விரும்பி பாதுகாக்கின்றனர். இவ்வாறு வளங்களும் வீரர்களும் உடையது தகடூரைப் பற்றி பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.

**தகடூர் கல்வெட்டுகள்**

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு 'தகடூர்' பற்றியக் குறிப்புகள் பல கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

"ஸ்வஸ்தபறீ திரிபுவனச் சக்கரவர்த்தின்
பறீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு பன்னிரண்டாவது
நுகரிலி சோழமண்டலத்து கங்கநாட்டுத்
தகடூர் நாட்டுத் தகடூர்" (தமிழ்நாடன், தருமபுரி மாவட்டம் புதிய ஆய்வுகள், ப-15)

என்ற கல்வெட்டின் வழியாக தகடூர் என்னும் பெயர் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகின்றது.

**தமிழ்செவ்வியல் இலக்கியங்களில் நடுகற்கள்**

நடுகல் என்பது இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். இதை "வீரக்கற்கள்" என்றும் அழைப்பர். போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு அவர்களின் பிறப்பு, இறப்பு, வாழ்க்கையைப் பற்றிய செய்திகளுடன் இறந்த இடத்தில் நட்டுவைக்கும் கற்களே வீரக்கற்கள் என்றழைக்கப்பட்டது. இதில் அரிமிதைய மாவலி வாரணராயிரின் தகடூர் நடுகல், ரெட்டியூர் நடுகல், மோத்தக்கல் நடுகல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சங்க இலக்கியங்களில் நடுகற்கள் பற்றிய செய்திகள் பல இடம்பெற்றுள்ளன.

என்னை விட்டுபிரிந்து செல்லும் என்மகள் அவள் விருப்பப்படியே அந்த ஆண்மகனின் மார்பை தழுவுவாளாக. அதற்கு இந்த நடுகல்தெய்வமாக இருந்து பாதுகாக்கட்டும் என்று ஒருதாய் புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகல் பீலிசூட்டித் துடிப்படுத்துத் (அகநானூறு - 35)

நாளும் தவறாமல் தம் முன்னோர்களின் நடுகல்லைத் தொழுது நாள்தோறும் விருந்தினர் என் இல்லத்திற்கு வரவேண்டும் என்கணவனும் அவன்தலைவனாகிய வேந்தனும் பிறநாடுகளில் வென்று பொருள்பெற உதவும் வகையை அடைவானாக என்று அவள் நடுகல்லை வழிபட்டதாக புறநானூறு பதிவு செய்திருக்கிறது.

நடுகல் கைதொழுது பரவும், எரியாது;
விருந்து பெறுகதில் யானே (புறம் - 306)

பெரிய யானையின் காலடிபோல தோன்றும் ஒரு கண்ணுடைய பாறையைப் போன்ற இரவலனே, நீ அந்த வழியாக சென்றால், அங்கே ஒரு நடுகல் இருக்கிறது. அதைத் தவறாமல் வழிபட்டுச் செல்க. அது 'வண்டர்' என்னும் ஒருவகை வீரர்கள் மிகுதியாக உள்ள கொடிய வழியாகும். அங்கே பல ஆநிரைகளைக் கவர்வதற்கு வந்தவர் திரும்பிவந்து போரிட்டனர். போர்த் தொழிலைத்தவிர வேறு எதையும் கற்காத இளைய வீரர்கள் போரில் இருந்து நீங்கினார்கள். ஆனால், தலைவன் பகைவர்களின் வில்களிலிருந்து வந்த அம்புகள் அனைத்தையும் கரையை எரிக்கும் நீரைத் தடுக்கும் அணைப்போல தடுத்தான், அவனுடைய நடுகல் அங்கே உள்ளது என்று இப்பாடல் பதிவு செய்துள்ளது,

பல்லாத்திரள் நிரைபெயர்தர பெயர்தந்து
கல்லா இளையர் நீங்க, நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே (புறம் - 263)

பரல் கற்களை அடுக்கி கட்டிய பதுக்கைக் கோயிலில் நடுகல் நாட்டினர். அழகான மலர்மாலையை சூட்டினர். மயிற்பீலிகைக் கொண்டு அலங்கரித்துள்ளனர். அந்த நடுகல்லில் இந்தவீரனின் பெயர் பொறித்துள்ளனர். இவன் பகைவர் ஓட்டிய ஆநிரைகளைக் கன்றோடு மீட்டுத்தந்தவன் என்று அவன் பெருமைகளைக் கொண்டு நடுகல் வைக்கப்பட்டிருந்ததைப் புறநானூறு பதிவு செய்துள்ளது.

பலருடைய மருங்கின் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த சம்பூங் கன்னியொடு
அணி மயிற்பீலிசூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே (புறம் 264)

முடிவுரை

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் தகடூரும் நடுகற்களும் பிண்ணிப் பிணைந்தவை. சங்க இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதைப் போலவே, தகடூரும் வரலாற்றுக் காலந்தொட்டே செவ்வியல் மொழி இலக்கியத்தின் ஊடாகப் பண்பாட்டுத் தொடர்புடையது என்பதை இக்கட்டுரையின் வழியாக இனங்காண முடிகிறது.

பார்வை நூல்கள்

1 தீ.சுப்ரமணியம், வரலாற்றில் தகடூர் நாடு, திருவள்ளுவர் பொத்தக இல்லம் ஆறுமுக ஆசாரித் தெரு, தருமபுரி-636701.

2 தமிழ்நாடன்(தொகுப்பாசிரியர்),தருமபுரி மாவட்ட புதிய ஆய்வுகள், விவேகானந்தர், கொடை மற்றும் அறக்கட்டளை, தருமபுரி மு.ப.1995

3 புறநானூறு, கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை -600 098.

4 பதிற்றுப்பத்து, கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை -600 098.

5 அகநானூறு, கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை -600 098.